47

# A PRIMER
OF
# TAMIL GRAMMAR

## தமிழ் இலக்கணச் சுடர்.

BY

K. PALANIKUMARU PILLAI,
TAMIL PANDIT,
MADURA.

P. N. CHIDAMBARA MUDALIAR Bros.,
MADURA.

1927 [Price 4 Annas.

TB
P31
N27
177028

உ

# தமிழ் இலக்கணச் சுடர்

(வினா விடை)

இது

மதுரைக் காலேஜ், தமிழ்ப்பண்டிதர்,

க. பழநிக்குமாரப் பிள்ளையவர்களால்

எழுதப்பெற்றது.

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

புத்தக வியாபாரம், மதுரை.

உரிமைகளனைத்தும் பதிவுசெய்யப்பெற்றது.

1927.

[விலை அணா 4.

உ

# பொருளடக்கம்.

# CONTENTS.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | எழுத்தியல் ... ... ... | 1 |
| 2. | பதவியல் ... ... ... | 7 |
| 3. | பெயரியல் ... ... ... | 11 |
| 4. | வினையியல் ... ... ... | 22 |
| 5. | இடையுரியியல் ... ... ... | 30 |
| 6. | புணரியல் ... ... ... | 33 |
| 7. | சொற்றொடரியல் ... ... | 37 |
| 8. | அனுபந்தம் ... ... ... | 44 |

# பாயிரம்.

தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே.

அமிழ்தினுமினிய தமிழ்மொழி வழங்கும் நம்நாட்டின் கண், சீருஞ்சிறப்புமுற்றோங்கிய நம்முன்னோர் ஏனைய மொழிகளிலும் தமிழ் மொழியே மேன்பாடுடைத்து எனப்பல்லாற்றாலும் நுணுகியறிந்தவராய் மக்கள்பயின்று முன்னேற்றமடையும் பொருட்டுச் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்வியபனுவல்பல யாத்தனர். அவற்றுள்: எண்ணும் எழுத்துமே மக்கட்கு இன்றியமையாதன வெனக் கூறினர். அதனை, "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் கண்ணென்ப வாழுமுயிர்க்கு" என்ற நம்செந்நாப்போதார் திருவாக்காலும் தெளியலாம். எழுத்து என்பது இலக்கணம். தமிழ்மொழிக்கு முதலில் இலக்கணம் வகுத்தவர் பவத்திறங்களைந்து பயன்பல வளிக்கும் அகத்திய ராவர். அவ்விலக்கணம் வழங்கி வருங் காலத்தில் மக்கள் மொழிவளர்ச்சி மிக்குடையராய் விளங்கினமையின், அது எளிதாகவும் பொருள்தெளிவாகவும் காணப்பட்டதோ டமையாது அன்னாரை மதிவலிபடைத்த மாண்புடையோரென்று இக்காலத்திலுங்கருதும் பெற்றியராக்கிற்று.

அவ்வாறு சிறிதுகாலஞ் சென்றபின்னர் மக்கட்கு மொழிவளர்ச்சி குறைபடவே, அது அரிதுணர் நூலாகக் காணப்பட்டது. பிற்காலத்துப் புலமை சிறந்து விளங்கும் பல்லோரதனையறிந்து நன்னூல் முதலிய சின்னூல்களை யாத்தனர். அவை

களும் பிற்காலத்தார்க் கரிதாகத்தோன்றவே வசனவடிவமாக இலக்கணச்சுருக்கம் முதலிய நூல்கள் வெளிவரலாயின. இதனுல் நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி எவ்வளவு குறைபாடடைந்துகொண்டே வருகிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யார்க்கும் புலனுகும். நிற்க.

தற்காலம் ஆங்கில கலாசாலைகளிற் கல்வி பயிலும்மாணுக்கர்கள் தம் தாய்மொழியாகிய தமிழ்மொழியை யாது காரணத்தினலோ புறக்கணிக்கின்றனர். அவர், அறையாடையின்றி அங்கவத்திரந்தரித்தல் அழகாமாவென்பதை யுணராதவராவர். அத்தகையார்க்கும் இலக்கணவறிவுச்சுடர் கொளுத்தி தமிழ்ச்சுவை யூட்டுவான் வேண்டி "தமிழ் இலக்கணச்சுடர்" என்ற பெயருடன் இந்நூலை வெளியிடலானேன். இதில் ஒவ்வொரு விஷயங்களையும் தெளிவாக விளக்கியிருத்தலோடு, மாணுக்கர்கள் எளிதாயறிந்துகொள்ளுமாறு உதாரணங்களைக் கொடுத்திருக்கிறேன். சிலர் வினுவிடைகளுடன் மாணுக்கர்கட்குப் போதிப்பதே சால்புடைத்தெனக் கூறினமையின், அவர் கருத்திற்கிணங்க வினுவிடைகளாகவே யமைத்துள்ளேன். ஆதலால் ஆங்கில கலாசாலை யதிகாரிகள் தங்கள் கலாசாலைகளிற் பாடப்புத்தகமாக வைத்து என்னை மேன்மேலும் ஊக்குவார்களென நம்புகிறேன்.

மதுரை
12—3—27.

இங்ஙனம்.
க. பழநிக்குமரன்.

# தமிழ் இலக்கணச்சுடர்.

## (வினு விடைகளுடன்.)

### எழுத்தியல்.

(வினு) 1. இலக்கணமாவது யாது?

(விடை) இலக்கணமாவது பிழையில்லாமல் எழுதுவதற்கும், பிறரிடம் பேசுவதற்கும் கருவியாகிய நூலாம்.

2. இவ்விலக்கண நூல் எத்தனை பகுதிகளை யுடையது?

இவ்விலக்கண நூல் எழுத்தியல், பதவியல், பெயரியல், வினையியல், இடையுரியியல், சொற்றொடரியல், புணரியல் என எழு பகுதிகளை யுடையது.

3. இவ்வெழுத்தியல் எதனைக் கூறுகின்றது?

இவ்வெழுத்தியல் எழுத்துக்களின் இலக்கணங்களைப் பற்றிக் கூறுகின்றது.

#### எழுத்தின் பெயரும், எண்ணும்.

4. ஆபின் தமிழ் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

தமிழ் எழுத்துக்கள் மொத்தம் இருநூற்று காற்பத்தேழாம்.

5. அவைகளின் வகையாது?

அவ்வகை உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆயுதவெழுத்து என்பனவாம்.

### உயிரெழுத்து.

6. உயிரெழுத்து எத்தனை? அவை யாவை?

உயிரெழுத்து பன்னிரண்டாம். அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

7. இவ்வுயிரெழுத்துக்களுள் ஏதேனும் வகை உண்டா?

உண்டு. குற்றெழுத்து, நெட்டெழுத்து என இருவகைப் படும்.

8. குற்றெழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

குற்றெழுத்து ஐந்தாம். அவை—அ, இ, உ, எ, ஒ என்பன.

9. நெட்டெழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

நெட்டெழுத்துக்கள் ஏழாம். அவை—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன.

10. மேற்கூறிய குறில், நெடில் என்பவற்றிற்கு அர்த்தம் என்ன?

குறில்=குறுகிய சப்தத்தையுடையது. நெடில்=நீண்ட சப்தத்தையுடையது என்பதாம்.

### மெய்யெழுத்து.

11. மெய்யெழுத்துக்கள் மொத்தம் எத்தனை? மெய் என்ற சொல்லிற்கு அர்த்தம் என்ன?

மெய்யெழுத்துக்கள் மொத்தம் பதினெட்டாம். மெய் நம் சரீரம்போல் உயிருடன் சேர்ந்தே நடக்கும் தன்மை வாய்ந்தது என்பதாம்.

12. அம் மெய்யெழுத்துக்கள் யாவை?

அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பனவாம்.

13. உயிரெழுத்துக்களைப்போல் இம் மெய்யெழுத்துக்களுள் வகை ஏதேனும் உண்டா?

உண்டு. அவை வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என மூவகைப்படும்.

14. வல்லெழுத்து என்றாலென்ன? அவை எவை?

வல்லெழுத்து=வலிய சப்தத்தையுடைய எழுத்துக்கள். அவை க், ச், ட், த், ப், ற் என ஆறாம்.

15. மெல்லெழுத்து என்றாலென்ன? அவை எவை?

மெல்லெழுத்து=மிருதுவான சப்தத்தையுடைய எழுத்துக்கள். அவை ங் ஞ், ண், ந், ம், ன் என ஆறாம்.

16. இடையெழுத்து என்றாலென்ன? அவை எவை?

இடையெழுத்து=(வல்லெழுத்து, மெல்லெழுத்துகட்கு) நடுத்தரமான சப்தத்தையுடைய எழுத்துக்கள். அவை, ய், ர், ல், வ், ழ், ள் என ஆறாம்.

## உயிர் மெய்யெழுத்து.

17. உயிர்மெய்யெழுத்தென்றால் என்ன? அவைஎத்தனை?

உயிர்மெய்யெழுத்து=உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் கலப்பதினால் ஏற்படும் எழுத்துக்கள். அவை இருநூற்றுப் பதினாறாம்.

18. அவ்வுயிர்மெய் இருநூற்றுப் பதினாறுவதெப்படி?

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களுடன் தனித்தனி சேர்ந்து வருவதினால் இருநூற்றுப்பதினாறு ஆயின. அவை கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையுட் கண்டுகொள்க.

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

இம்மெய்கள் அகரத்துடன் சேரும்பொழுது புள்ளி நீங்கியும், பிறவுயிர்களுடன் சேரும் பொழுது புள்ளியும் வடிவும் வேறுபட்டும் வருவதை இங்கேயே சொல்லிக்காண்க.

19. ஆயுத எழுத்தாவது யாது?

மூன்று புள்ளி வடிவுடையதாய் வரும் எழுத்து ஆயுத வெழுத்தாம். அது ஃ என்பதாம்.

20. முன் கூறியபடி தமிழ் எழுத்துக்கள் இருநூற்று நாற்பத்தேழாவது எப்படி ?

| | |
|---|---|
| உயிரெழுத்து | 12 |
| மெய்யெழுத்து | 18 |
| உயிர்மெய்யெழுத்து | 216 |
| ஆயுதவெழுத்து | 1 |
| ஆக | 247 ஆயிற்று |

21. அறிந்துகொண்டவை இவையேயன்றி இன்னுமறிந்து கொள்ளவேண்டியவை இவ்வியலுள் உண்டோ?

உண்டு. அவை குற்றியலுகரம், முற்றியலுகரம், சாரியை என்பனவாம்.

## குற்றியலுகரம்.

22. ஆயின், குற்றியலுகரமாவது யாது?

குற்றியலுகரமாவது தனிக் குற்றெழுத்தல்லாத மற்றை எழுத்துக்களாலாகிய ஓர் சொல்லின் கடைசியில், கு, சு, டு, து, பு, று என்ற ஆறு எழுத்துக்களுள் ஒன்று வருமானால் அது குற்றியலுகரமென்று சொல்லப்படும். அது கடைசியெழுத்திற்கு முந்தினவெழுத்தை நோக்கி, நெடிற்றொடர், உயிர்த்தொடர், ஆயுதத்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் என ஆறு வகைப்படும்.

(உதாரணம்) ஆடு, மாடு—நெடிற்றொடர்.

வரகு, மிளகு—உயிர்த்தொடர்.
இஃது, அஃது—ஆய்தத்தொடர்.
சுக்கு, பாக்கு—வன்றொடர்.
சங்கு, வண்டு—மென்றொடர்.
வெய்து—இடைத்தொடர்.

## முற்றியலுகரம்.

23. முற்றியலுகரமாவது யாது?

முற்றியலுகரமாவது தனிக்குற்றெழுத்தைச் சார்ந்து வல்லின மெய்யின்மேலாவது, மெல்லின மெய்யின்மேலாவது, இடையின மெய்யின்மேலாவது ஏறிவரும் உகரமும் தனி உகரமுமாம்.

(உதாரணம்) அது, பசு, தாணு, கதவு, உ.

## சாரியை.

24. சாரியையாவது யாது?

அ, கரம், காரம், கான் என்பவைகளாம். இவை எழுத்துக்களைச் சொல்லும்பொழுதும் எழுதும்பொழுதும் பயன்படுவனவாம்.

(உதாரணம்) அகரம், ஆகாரம், ககரம், க,

எழுத்தியல் முற்றிற்று.

## பதவியல்.

25. இப்பதவியல் எதனைப்பற்றிக் கூறுகின்றது?

இவ்வியல் சொற்களின் இலக்கணங்களைப் பற்றிக்கூறு கின்றது. பதம்=சொல். இயல்=இலக்கணம்.

### பதமின்னதென்பது.

26. பதமாவது யாது?

பதமாவது ஓர் எழுத்தாலாயினும், இரண்டு முதலிய பல எழுத்துக்களாலாயினும் ஆக்கப்பட்டுப்பொருளைத் தெரிவிப் பதாம்.

(உ-ம்) ஓர் எழுத்தாலாயபதம்—ஆ, கோ, மா. பல வெழுத்தாலாய பதம்—கண், மூக்கு, இடுப்பு, கொடுத்தான்.

27. அப்பதம் எத்தனை வகைப்படும்?

அப்பதம் பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

### பகாப்பதம்.

28. பகாப்பதமாவது யாது?

பிரிக்கப்படாத தன்மையையுடையபதம் பகாப்பதமாம். அது, பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப் பதம், உரிப்பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

(உ-ம்) கல், வில், பொன். முதலியன பெயர்ப்பகாப்பதங்களாம்.
நட, போ, வா. முதலியன வினைப்பகாப்பதங்களாம்.
மற்று, அரோ. முதலியன இடைப்பகாப்பதங்களாம்.
சால, நனி, கூர். முதலியன உரிப்பகாப்பதங்களாம்.

### பகுபதம்.

29. பகுபதமாவது யாது?

பிரிக்கப்படும் தன்மையையுடையபதம் பகுபதமாம். அது பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

(உ-ம்) பொன்னன், கொற்றன் பெயர்ப்பகுபதங்களாம்.
உண்டான், தின்றான் வினைப்பகுபதங்களாம்.

## பகுபதவுறுப்புக்கள்.

30. இப்பகுபதங்களை எத்தனைவகையாகப் பிரிக்கலாம்?

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறுவகையாகப் பிரிக்கலாம். இங்குக்கூறிய பகுதியும் விகுதியும் பகுபதங்கட்குக் கட்டாயம்வரும். ஏனைய அவற்றை யேற்கு மிடங்களில் வரும்.

(உ-ம்) கூனி, கூன்+இ பகுதி விகுதி என்ற இரண்டால் வந்தது.

உண்டான், உண்+ட்+ஆன். பகுதி, இடைநிலை, விகுதி என்ற மூன்றால்வந்தது.

## பகுதி.

31. பகுதியாவது யாது?

பகுபதத்தின் முதலிலிருக்கும் பிரிக்கப்படாத தன்மையையுடைய பதங்களே பகுதிகளெனப்படும்.

(உ-ம்) பொன்னன். இதனுள் பொன் என்பது பகுதி.
நடந்தான். இதனுள் நட என்பது பகுதி.

## விகுதி.

32. விகுதியாவது யாது?

பகுபதத்தின்கடைசியிலிருக்கும் பிரிக்கப்படாத தன்மையையுடைய பதங்களே விகுதிகளெனப்படும்.

(உ-ம்) முருகன். இதனுள் அன் என்பது விகுதி.
குழையள். இதனுள் அள்என்பது விகுதி.
அறிஞர். இதனுள் அர் என்பது விகுதி.

33. இவ்விகுதி எத்தனை வகைப்படும்?

பெயர்விகுதி, தொழிற்பெயர்விகுதி, பண்புப்பெயர் விகுதி, வினைமுற்றுவிகுதி, பெயரெச்ச விகுதி, வினையெச்ச விகுதி என ஆறுவகைப்படும்.

பெயர் விகுதிகள்—அன், ஆன், அள், ஆள், அர், து முதலியனவாம்.

தொழிற்பெயர் விகுதிகள்—தல், அல், அம், கை, வை முதலியனவாம்.

பண்புப்பெயர் விகுதிகள்—மை, ஐ, சி, பு, உ முதலியனவாம்.

வினைமுற்று விகுதிகள்—அன், ஆன், முதலியனவாம்.
பெயரெச்ச விகுதிகள்—அ, உம் இரண்டுமாம்.
வினையெச்ச விகுதிகள்—உ, இ, ஆல் முதலியனவாம்.

## இடை நிலை.

34. இடை நிலையாவது யாது?

பகுபதங்களின் நடுவிலிருந்து காலத்தைக் காட்டிவரும் எழுத்துக்களே இடைநிலை யெனப்படும்.

(உ-ம்) அறிஞர்=அறி+ஞ்+அர். இதனுள் ஞ் என்பது இடைநிலையாம்.

உண்டான்=உண்+ட்+ஆன். இதனுள் ட் என்பது இடைநிலையாம்.

35. இவ்விடைநிலை எத்தனை வகைப்படும்?

பெயரிடைநிலை, வினையிடைநிலை என விருவகைப்படும்.

36. பெயரிடை நிலையாவது யாது?

பெயர்ப்பகுபதங்களின் இடையில் நிற்பன பெயரிடைநிலைகளாம்.

(உ-ம்) அறிஞன்.

37. வினையிடை நிலையாவது யாது?

வினைப்பகுதங்களின் இடையில் நிற்பன வினையிடை நிலைகளாம்.

(உ-ம்) நடந்தான். வந்தான்.

சாரியை.

38. சாரியையாவது யாது?

ஒன்றோடொன்று சேராத இரண்டு சொற்களைச் சேர்ப்பதின்பொருட்டு வருவது. அது, அன், ஆன், அற்று, அத்து, இன் முதலியனவாம்.

(உ-ம்) நடந்தனன்—அன்—சாரியை
ஒரு பாற்கு—ஆன்—சாரியை
பலவற்றை—அற்று—சாரியை
மரத்துக்கோடு—அத்து—சாரியை
ஞெண்டின்கால்—இன்—சாரியை

சந்தி.

39. சந்தியாவது யாது?

இரண்டு சொற்கள் ஒன்றுபடச் சேருமிடத்துண்டாகும் தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய புணர்ச்சி விகாரங்களாம்.

(உ-ம்) பூ+கொடி=பூக்கொடி. இடையில் ககரமெய் தோன்றிற்று.

மரம்+பனை=மரப்பனை. இடையிலுள்ள மகரம் பகரமாகத் திரிந்தது.

மரம்+வேர்=மரவேர். இடையிலுள்ள மகரமெய் கெட்டது.

விகாரம்.

40. விகாரமாவது யாது?

செய்யுளினிடத்துத் தோன்றும், வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் முதலிய விகாரங்களாம். இவை பின்பு விவரிக்கப்படும்

பதவியல் முற்றிற்று.

## பெயரியல்.

41. இப் பெயரியல் எதனைப்பற்றிக் கூறுகின்றது?

பெரியோர்கள் ஒவ்வொரு பொருட்கும் இடுகுறியினாலேயோ, காரணத்தினாலேயோ, இடப்பட்டபெயர்களின் இலக்கணங்களை முறையே கூறுகின்றது.

### இடுகுறிப் பெயரினிலக்கணம்.

42. இடுகுறியாவது யாது?

பெரியோர்களால் ஒருபொருளுக்கு காரணமில்லாமல் இடப்பட்ட பெயராம். இடுகுறி யென்பதனை பெயருடன் சேர்த்து இடுகுறிப்பெயர் என்று அழைக்கப்படும்.

(உ-ம்) மரம், கல், பல் முதலியன யாதொரு காரணமும் பற்று து வந்தமை காண்க.

### காரணப் பெயரினிலக்கணம்

43. காரணமாவது யாது?

ஓர் பொருளுக்கு யாதாயினுமோர் காரணம்பற்றி இட்டு அழைக்கும் பெயராம். காரணமென்பதனைப் பெயருடன் சேர்த்து காரணப் பெயர் என்று அழைக்கப்படும்.

(உ-ம்) அணி, சிலம்பு இவை காரணம்பற்றி வந்தமை காண்க. அணி = அணிதல் (தரித்தல்), சிலம்பு = ஒலித்தல், அணிதலும் ஒலித்தலுமாகிய காரணம்பற்றி வந்தமையறிக.

### பெயரின் வகை.

44. அப்பெயர் எத்தனை வகைப்படும்?

தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர், சுட்டுப்பெயர், வினைப்பெயர், பொதுப்பெயர் என ஆறுவகைப் படும்.

### தன்மைப்பெயர்.

45. தன்மைப்பெயராவது யாது? அது எத்தனை வகைப்படும்?

ஒரு விஷயத்தைப் பேசும் பொருள் தன்மைப்பெயராம். அது தன்மையொருமைப்பெயர், தன்மைப் பன்மைப்பெயர் என இருவகைப்படும்.

(உ-ம்) நான், யான் முதலியன தன்மை யொருமைப் பெயர்களாம்.

நாம், நாங்கள், யாம், யாங்கள் முதலியன தன்மைப் பன்மைப் பெயர்களாம்.

### முன்னிலைப் பெயர்.

46. முன்னிலைப் பெயராவது யாது? அது எத்தனை வகைப்படும்?

ஒரு விஷயத்தைப் பேசுவோனுடைய சொற்களைக் கேட்கும் பொருள் முன்னிலைப் பெயராம். அது, முன்னிலை யொருமைப் பெயர், முன்னிலைப் பன்மைப்பெயர் என இருவகைப்படும்.

(உ-ம்) நீ என்பது முன்னிலை யொருமைப் பெயராம். நீர், நீங்கள் என்பன முன்னிலைப்பன்மைப்பெயர்களாம்

### படர்க்கைப் பெயர்.

47. படர்க்கைப் பெயராவது யாது? அது எத்தனை வகைப்படும்?

சொல்லுபவனும், கேட்பவனும் அல்லாத மற்றப் பொருள்கள் எல்லாம் படர்க்கைப் பெயர்களாம். அவை படர்க்கை யொருமைப்பெயர், படர்க்கைப் பன்மைப்பெயர் என இருவகைப்படும்.

(உ-ம்) அவன், அவள், அது முதலியன படர்க்கை யொருமைப் பெயர்களாம்.

அவர், அவர்கள், அவை, இவை படர்க்கைப் பன்மைப் பெயர்களாம்.

சுட்டுப் பெயர்.

48. சுட்டுப்பெயராவது யாது? அது எவ்வாறு வரும்?

தானறிந்த பொருளைப் பிறருக்கறிவிக்க வேண்டி குறித்துக் காண்பிக்கும் பெயராம். அது அ, இ, உ என்ற மூன்றனுள் ஓர் எழுத்தை முதலில் பெற்றுவரும்.

(உ-ம்) அவன், இவன், உவன்
அவர் இவர் உவர்
அது இது உது

இவற்றுள் முறையே அவ்வெழுத்துக்கள் வந்தமை தெரிக.

வினைப்பெயர்.

49. வினைப்பெயராவது யாது? அது எவ்வாறு வரும்?

தான் அறிந்ததையோ, அறியாததையோ பிறன் அறிந்திருக்கிருனென்று கேட்டற்கு வரும்பெயராம். அது எ, ஏ, ஆ, ஓ, யா என்ற எழுத்துக்களுள் ஒன்றைப்பெற்று வரும்.

(உ-ம்) எவன், ஏவன், ராமனா. யாவன், கொற்றனோ.

இவை மேற்கூறிய எழுத்துக்களுள் ஒன்றைப்பெற்று வந்தமை யுணர்க.

பொதுப்பெயர்.

50. பொதுப்பெயராவதுயாது? அது எத்தனை வகைப் படும்?

ஓரேபெயர் இரண்டு முதலான பொருள்களுக்கு உரித்தாய் வருவதாம். இது பால்பகாவஃறிணைப் பொதுப்பெயர், இருதிணைப்பொதுப்பெயர்· திணைபால் இடங்கட்குப்பொதுப் பெயர் என மூன்றுவகைப்படும். இவற்றைப்பின்னர் விரித்துரைக்கப்படும்.

வேறு.

51. இன்னும் இவ்வியலுள் அறிந்துகொள்ள வேண்டியவை யாவை?

திணை, பால், எண், இடம், வேற்றுமை, என்ற ஐந்துமாம்.

### திணையும் அதன்வகையும்.

52. அவற்றுள் திணையாவது யாது? அது எத்தனை வகைப்படும்?

திணையாவது ஒரு கூட்டத்தினுள் சிலவற்றைப் பகுத்துக் காண்பிப்பது. அது உயர்திணை, அஃறிணை என்றிரு வகைப்படும். அவற்றுள் உயர்திணை உயர்ந்தஜாதிப் பொருளையும், அஃறிணை தாழ்ந்த ஜாதிப்பொருளையும் காட்டும். பெயர் என்பதனை அவ்விரு சொல்லின்பின்னும் சேர்த்து உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர் என்று இலக்கண நூலார்வழங்குவர்.

53. உயர்திணைப் பெயர்களென்பன எவை?

தேவர்களுடைய பெயர்களும், மனிதர்களுடைய பெயர்களும் உயர்திணைப் பெயர்களாம்.

(உ-ம்) முருகன், இராமன், வேடன், கொல்லன்.

54. அஃறிணைப்பெயர்களென்பன எவை?

மேற்கூறிய உயர்திணைப் பெயர்களல்லாத பிறபெயர்கள் எல்லாம் அஃறிணைப்பெயர்களாம்.

(உ-ம்) பசு புலி, கல், வில்.

### பால்.

55. பால் என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?

மேற்கூறிய திணைகளுள் உள்ள பாகுபாட்டைப் பகுத்துக் காட்டுவதற்குப் பால் என்று பெயராம். அது, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனஐந்து வகைப்படும்.

(உ-ம்) இராமன், கிருஷ்ணன், இவை ஆண்பால்

நடந்தாள், வந்தவள். இவை பெண்பால்.

வந்தவர், சென்றவர். இவை பலர்பால்.

நடந்தது, வந்தது இவை ஒன்றன்பால்.

வந்தவை, சென்றவை. இவை பலவின்பால்.

இவற்றுள் ஆண்பால், பெண்பால், பலர்பால் மூன்றும் உயர்திணைக்கேயுரியவை.

ஒன்றன்பால், பலவின்பால். இவையிரண்டும் அஃறிணைக்கேயுரியவை.

### எண்.

56. எண் என்பது யாது?

எண் என்பது ஒரு பொருளை இவ்வளவென்று அளவிடுவதாம். அது ஒருமை, பன்மை என இருவகைப்படும்.

அவற்றுள் ஆண்பாலும், பெண்பாலும், ஒன்றன்பாலும் ஒருமையெண்ணைக் குறிப்பன. பலர்பாலும் பலவின்பாலும் பன்மையெண்ணைக் குறிப்பன.

(உ-ம்) அவன், அவள் அது இவை ஒருமை எண்ணைக் குறித்து வந்தன.

அவர், அவை. இவை பன்மை எண்ணைக் குறித்து வந்தன.

## இடம்

57. இடம் என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?

ஒருவனேடொருவன் பேசுகையில் இவன் இத்தகையன் அவன் இத்தகையன் என்று விளக்குவதாம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

இவற்றுள் ஒருமை, பன்மையைக் காட்டுவன தன்மைப் பெயரும், முன்னிலைப் பெயருமாம்.

திணை, பால் முதலியவற்றைக் காட்டுவன படர்க்கைப் பெயர்களாம்.

| (உ-ம்) | ஒருமை. | பன்மை |
|---|---|---|
| | தன்மை—யான், நான். | யாம், நாம். |
| | முன்னிலை—நீ. | நீர் நீவிர். |

படர்க்கை
- இவன்—ஆண்பால்.
- இவள்—பெண்பால்.
- இவர்—பலர்பால்.
- இது—ஒன்றன்பால்
- இவை—பலவின்பால்.

## வேற்றுமை இன்னதென்பது.

58. வேற்றுமையென்பது யாது? அது எத்தனைவகைப்படும்?

பெயர்ச்சொற்களின் பொருளை வேறு படுத்துவது வேற்றுமையாம். அது எட்டுவகைப்படும். அவை பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், பெயரின் விகாரம் என்பனவாம்,

59. முதல் வேற்றுமையாவது யாது? அதன் உருபென்ன?

விகாரப்படாத பெயரே முதல் வேற்றுமையாம். அதற்கு வேறு உருபு என்பதில்லை. அது மற்றைய வேற்றுமை யுருபுகளை யேற்றுவரும்.

உ-ம். கந்தன், இராமன், கிருஷ்ணன்.

60. இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன?

ஐ என்பதொன்றேயாம்.

(உ-ம்) கந்தன் + ஐ = கந்தனை.
இராமன் + ஐ = இராமனை.
கிருஷ்ணன் + ஐ = கிருஷ்ணனை.

இவற்றுள் தென்னை, பனை, பூனை என்று வருவன இரண்டாம் வேற்றுமை யல்ல. அவை ஐகாரவீற்றுப் பெயர்களாம். அவை இரண்டாம் வேற்றுமை யாகும்போது, தென்னையை, பனையை, பூனையை என வரும்.

61. மூன்றும் வேற்றுமையின் உருபென்ன?

மூன்றும் வேற்றுமையின் உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாம்.

(உ-ம்) கந்தன் + ஆல் = கந்தனால்.
இராமன் + ஒடு = இராமனொடு.
கிருஷ்ணன் + ஓடு = கிருஷ்ணனோடு.

62. நான்காம் வேற்றுமையின் உருபென்ன?

நான்காம் வேற்றுமையின் உருபு கு ஒன்றேயாம்

(உ-ம்) கந்தன் + கு = கந்தனுக்கு.
இராமன் + கு = இராமனுக்கு.
கிருஷ்ணன் + கு = கிருஷ்ணனுக்கு.

இவற்றுள் நாக்கு, மூக்கு முதலியன நான்காம் வேற்றுமையல்ல. இவை நான்காம் வேற்றுமை யாம்பொழுது, நாக்குக்கு, மூக்குக்கு எனவரும்.

63. ஐந்தாம் வேற்றுமையின் உருபென்ன?

ஐந்தாம் வேற்றுமையின் உருபு இன், இல் என்னுமிரண்டுமாம்.

(உ-ம்) கந்தன் + இன் = கந்தனின்.
இராமன் + இன் = இராமனின்.
கிருஷ்ணன் + இல் = கிருஷ்ணனில்.

64. ஆறும் வேற்றுமையின் உருபு யாது?

ஆறும் வேற்றுமையின் உருபு அது, ஆது, அ, உடைய என்னும் நான்குமாம்.

(உ-ம்) கந்தன் + அது = கந்தனது.
இராமன் + அது = இராமனது.
தன் + ஆது = தனாது.
தன் + அ = தன.
கிருஷ்ணன் + உடைய = கிருஷ்ணனுடைய.

65. ஏழாம் வேற்றுமையின் உருபு யாது?

ஏழாம் வேற்றுமையின் உருபு இல், கண், இடத்து முதலியனவாம்.

(உ-ம்) கந்தன் + இல் = கந்தனில்.
இராமன் + கண் = இராமன் கண்.
கிருஷ்ணன் + இடத்து = கிருஷ்ணனிடத்து.

66. எட்டாம் வேற்றுமையின் உருபு என்ன?

எட்டாம் வேற்றுமையின் உருபு, படர்க்கைப் பெயரின் கடைசியில் ஏ, ஓ மிகுதலும் அக்கடைசி திரிதலும் நீளலு மாம்.

(உ-ம்) கந்தன் + ஏ = கந்தனே. } ஏ, ஓ மிகுந்தது.
இராமன் + ஓ = இராமனோ. }
கிள்ளை-கிள்ளாய். ஈற்று ஐ, ஆய் எனத்திரிந்தது.
தம்பி—தம்பீ—ஈறு நீண்டது.

---

## சில பெயர்ச்சொற்கள்.

### உருபு ஏற்கும்பொழுது வேறுபாடடையு மென்பது.

67. சொற்கள் இவ்வாறுவேற்றுமையடையும்பொழுது, பெயர்ச்சொற்கள் ஏதேனும் வேறுபாட்டை யடைதலுமுண் டோ?

உண்டு: அவை யான், யாம், யாங்கள், நாம், நீ, நீர், நீங் கள் என்பனவாம்.

68. அவற்றுள்: யான்என்பது எவ்வாறு வேற்றுமைப் படும்?

யான் என்பது என் என வேறுபாடையும்.

(உ-ம்) யான்: என்னை, என்னால், எனக்கு, என்னிலி ருந்து, என்னுடைய, என்னிடத்து. (தன்மை) முன்னிலைப் பெயருக்கும், சுட்டுப்பெயருக்கும், வினைப்பெயருக்கும் எட் டாம் வேற்றுமையில்லை.

69. யாம், யாங்கள் என்பன எவ்வாறு வேற்றுமைப் படும்?

யாம் என்பது எம் எனவும், யாங்கள் என்பது எங்கள் எனவும் வேறுபாடடையும்.

(உ-ம்) யாம்: எம்மை, எம்மால், எமக்கு, எம்மிலிருந்து, எம்முடைய எம்மிடத்து. யாங்கள்: எங்களை, எங்களால், எங்களுக்கு, எங்களிலிருந்து, எங்களுடைய, எங்களிடத்து.

**70.** நாம் என்பது எவ்வாறு வேற்றுமைப்படும்?

நாம் என்பது நம் என வேறுபாடடையும்.

(உ-ம்) நாம், நம்மை, நம்மால், நமக்கு, நம்மிலிருந்து, நம்முடைய, நம்மிடத்து.

**71.** நீ என்பது எவ்வாறு வேற்றுமைப்படும்?

நீ என்பது 'உன்' என வேறுபாடடையும்.

(உ-ம்) நீ: உன்னை, உன்னால், உனக்கு, உன்னிலிருந்து, உன்னுடைய, உன்னிடத்து.

**72.** நீர், நீங்கள் என்பன எவ்வாறு வேறுபாடடையும்?

நீர் என்பது உம் எனவும், நீங்கள் என்பது உங்கள் எனவும் வேறுபாடடையும்.

(உ-ம்) நீர்: உம்மை, உம்மால், உமக்கு, உம்மிலிருந்து, உம்முடைய, உம்மிடத்து.

நீங்கள்: உங்களை, உங்களால், உங்களுக்கு, உங்களிலிருந்து, உங்களுடைய, உங்களிடத்து.

### பால் பகா வஃறிணைப் பொதுப்பெயர்.

**73.** முன் ஐம்பதாவது பாராவில் கூறிய பொதுப்பெயருள் பால் பகா வஃறிணைப் பொதுப் பெயரென்பது யாது?

பால் பகா வஃறிணைப் பொதுப்பெயராவது அஃறிணையில் ஒன்றன்பாலாகவும் பலவின் பாலாகவும் பிரிக்கப்படாமல் இருபாலுக்கும் பொதுவாக நிற்கும் பெயராம்.

| | ஒன்றன் பால். | பலவின்பால். |
|---|---|---|
| (உ-ம்) | பறவைவந்தது. | பறவைவந்தன. |
| | மாடுவந்தது. | மாடுவந்தன. |

இவற்றுள் பறவை, மாடு என்னு மிருசொற்களும் ஒன்றன் பாலாகவும், பலவின்பாலாகவும் வழங்குவதால் பால் பகா வஃறிணைப் பொதுப் பெயராயிற்று. ஏனையவற்றையும் இவ்வாறே கண்டு தெளிக.

## இருதிணைப் பொதுப்பெயர்.

74. இருதிணைப் பொதுப்பெயரென்பது யாது?

இருதிணைப் பொதுப்பெயராவது உயர்திணை, அஃறிணை என்ற இருதிணைக்கும் பொதுவாகவரும் பெயர்களாம்.

அவை: தன்மைப்பெயரும், முன்னிலைப்பெயரும், எல்லாம், தாம், தான் முதலிய பெயர்களுமாம்.

75. அவை இருதிணைக்கும் பொதுவாவதெப்படி?

ஓர் மனிதன் யான் நடந்துவந்தேன் என்ற இடத்து யான் என்பது உயர்திணையிலும், ஓர் பறவை யான் பறந்து வந்தேன் என்ற இடத்து யான் என்பது அஃறிணையிலும் வருதலால் இருதிணைப் பொதுப்பெயராயிற்று. மற்ற வற்றையுமிவ்வாறே பார்த்துணர்க.

| உயர்திணை. | அஃறிணை. |
|---|---|
| யான் இராமன். | யான்பறவை. |
| நீ நம்பி. | நீ பறவை. |

அவரெல்லாம். அவையெல்லாம்.
அவர்தாம். அவைதாம்.
அவன்தான். அதுதான்.

76. இருதிணை ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுப் பெயராவது யாது?

எல்லாம் என்பது உயர்திணை, அஃறிணை என்ற இரு திணையிலும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்என்ற ஐம்பாலிலும், தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடத்திலும் பொதுவாகவரும். அவ்வாறு வருதலை கீழ்வரும் உதாரணங்கள் மூலமறிக.

(உ-ம்) நாங்கள் எல்லாம் வந்தோம்—தன்மையில் வந்தது.
நீர் எல்லாம் சென்றீர்—முன்னிலையில் வந்தது.
இவர் எல்லாம் போனார்கள்—படர்க்கை உயர்திணைப் பலர் பாலில் வந்தது.
இவை எல்லாம் போயின—படர்க்கை அஃறிணைப் பலவின்பாலில் வந்தது.

பெயரியல் முற்றிற்று.

---

## வினையியல்.

77. இவ்வினையியல் எதனைப்பற்றிக்கூறுகின்றது?

ஏதேனுமோர் பொருளின் தொழில் நிகழ்ச்சியைக் காட்டும் வினைச்சொற்களின் இலக்கணங்களை முறையே கூறுகின்றது.

### வினைச்சொல்லின் வகை.

78. இவ்வினைச்சொற்கள் எத்தனைவகைப்படும்?

வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூவகைப் படும்.

79. வினைமுற்று எத்தனைவகைப்படும்?

தன்மைவினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று என ஐந்து வகைப்படும்.

80. அவற்றுள் தன்மை வினைமுற்று எத்தனை வகைப் படும்?

தன்மை யொருமை வினைமுற்று, தன்மைப் பன்மை வினைமுற்று என இருவகைப்படும்.

(உ-ம்) செய்வேன், தின்பேன். இவை தன்மையொரு மை வினைமுற்றுக்கள்.

செய்வோம், தின்போம். இவை தன்மைப் பன்மை வினை முற்றுக்கள்.

81. முன்னிலை வினைமுற்று எத்தனை வகைப்படும்?

முன்னிலை யொருமை வினைமுற்று, முன்னிலைப்பன்மை வினைமுற்று என இருவகைப்படும்.

(உ-ம்) வந்தாய், சென்றாய். இவை முன்னிலை யொரு மை வினைமுற்றுக்கள்.

வந்தீர், சென்றீர். இவை முன்னிலைப் பன்மை வினை முற்றுக்கள்.

82. படர்க்கை வினைமுற்று எத்தனை வகைப்படும்?

உயர்திணை ஆண்பாற் படர்க்கை வினைமுற்று, பெண்பாற் படர்க்கை வினைமுற்று, பலர்பாற்படர்க்கை வினைமுற்று என

வும், அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று, பலவின் பாற் படர்க்கை வினைமுற்று எனவும் ஐந்து வகைப்படும்.

(உ-ம்) நடந்தான், தின்றான். ஆண்பால் படர்க்கை வினைமுற்று.

| | | |
|---|---|---|
| நடந்தாள், தின்றாள். | பெண்பால் | ஷை |
| நடந்தார், தின்றார். | பலர்பால் | ஷை |
| நடந்தது, தின்றது. | ஒன்றன்பால் | ஷை |
| நடந்தன, தின்றன. | பலவின்பால் | ஷை |

83. ஏவல் வினைமுற்றாவது யாது? அது எத்தனை வகைப்படும்?

ஏவல் வினைமுற்றாவது, ஒருவன் தனக்குமுன் நிற்பவனை நோக்கி இது செய் என்று ஏவுவது. அது ஏவல் ஒருமை வினைமுற்று, ஏவற் பன்மை வினைமுற்று என்று இருவகைப் படும்

(உ-ம்) நட. நடப்பி, இவை ஏவலொருமை வினைமுற்று.
நடப்பீர், நடமின். இவை ஏவற்பன்மை வினைமுற்று.

84. வியங்கோள் வினைமுற்றாவது யாது? அது எத்தனை வகைப்படும்.

வியங்கோள் வினைமுற்றாவது எதிர்காலங் காட்டும் க, இ முதலிய விகுதிகளுள் ஒன்றைக் கடைசியிலுடையதாய், தன்மை, முன்னிலை, படர்க்கைஎன்ற மூன்றிடத்தும், வாழ்த்துதற்பொருளிலாவது, வைதற்பொருளிலாவது வருவதாம். அது வியங்கோள் ஒருமை வினைமுற்று, வியங்கோள் பன்மை வினைமுற்று என்று இருவகைப்படும்.

(உ-ம்) தன்மை ஒருமை { யான் வாழ்க, யான்கெடுக.
யான் வாழி.

| | |
|---|---|
| தன்மைப் பன்மை | யாம் வாழ்க, யாம் அழிக. யாம் வாழி. |
| முன்னிலை ஒருமை | நீ வாழ்க, நீ கெடுக. நீ வாழி. |
| முன்னிலைப் பன்மை | நீர் வாழ்க, நீர் கெடுக. நீர் வாழி. |
| படர்க்கை ஒருமை | அவன் வாழ்க, அவன் கெடுக. அவன் வாழி. |
| படர்க்கைப் பன்மை | அவர் வாழ்க, அவர் கெடுக. அவர் வாழி. |

இவை வாழ்த்துதற் பொருளிலும், வைதற்பொருளிலும் வந்தமை காண்க.

85. நாம் இவற்றில் தெரிந்துகொள்ள வேண்டியவை ஏதேனு முண்டோ?

**காலம்.**

உண்டு: அது காலம் ஒன்றேயாம். அது இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் என மூவகைப்படும்.

| | இறந்தகாலம். | எதிர்காலம். | நிகழ்காலம். |
|---|---|---|---|
| (உ-ம்.) | வந்தேன். | வருவேன். | வருகின்றேன். |
| | தின்றேன். | தின்பேன். | தின்கின்றேன். |
| | நடந்தேன். | நடப்பேன். | நடக்கின்றேன். |

**பெயரெச்சம்.**

86. பெயரெச்சமென்பது யாது? அது எத்தனை வகைப்படும்?

பெயரெச்சமென்பது: பால் காட்டும் விகுதி குறைந்த வினைச்சொல் தனக்குப் பின்னால் யாதாயினும் ஓர் பெயர்ச்



177028

சொல்லைக்கொண்டு முடிவதாம். அது இறந்தகாலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம் என மூவகைப்படும்.

| | |
|---|---|
| (உ-ம்.) வந்த பையன்<br>நடந்த குதிரை<br>உண்ட இராமன் | இவை இறந்தகாலப் பெயரெச்சங்கள். |
| வரும் பையன்<br>நடக்கும் குதிரை<br>உண்ணும் இராமன் | இவை எதிர்காலப் பெயரெச்சங்கள். |
| வருகின்ற பையன்<br>நடக்கின்ற குதிரை<br>உண்ணுகின்ற இராமன் | இவை நிகழ்காலப் பெயரெச்சங்கள். |

இவற்றுள்: வந்த, நடந்த முதலியவை. பையன், குதிரை என்னும் பெயர்ச்சொற்களைக்கொண்டு வந்தமையால் பெயரெச்சங்களாயிற்று.

## வினையெச்சம்.

87. வினையெச்சமென்பது யாது? அது எத்தனை வகைப்படும்?

வினையெச்ச மென்பது: பால்காட்டும் விகுதி குறைந்த வினைச்சொல் தனக்குப் பின்னால் யாதாயினுமோர் வினைச்சொல்லைக் கொண்டு முடிவதாம். அது இறந்தகால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம் என மூவகைப்படும்.

| | |
|---|---|
| (உ-ம்.) உண்டு வந்தான்<br>கண்டுகளித்தான்<br>சென்றுகண்டான் | இவை இறந்த காலவினையெச்சங்கள். |

| | |
|---|---|
| நடப்பின் செய்யலாம்<br>உண்ணின் வரலாம்<br>உண்டால் போகலாம் | இவை எதிர் காலவினை யெச்சங்கள். |
| முடிக்க வந்தான்<br>செய்யப் போனன்<br>படிக்க வந்தான் | இவை நிகழ் காலவினை யெச்சங்கள். |

இவற்றுள்: உண்டு, கண்டு முதலியவை வந்தான், களித்தான் என்னும் வினைச்சொற்களைக்கொண்டு வந்தமையால் வினையெச்சங்களாயிற்று.

88. இன்னும் இவ்வியலுள் அறிந்துகொள்ள வேண்டியவை ஏதேனுமுண்டா? உண்டு. அவை: தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றுவினை, உடன்பாட்டு வினை, எதிர் மறைவினை முதலியவைகளாம்.

| | இறந்தகாலம் | எதிர்காலம் | நிகழ்காலம் |
|---|---|---|---|
| தன்வினை | நடந்தான் | நடப்பான் | நடக்கின்றன் |
| பிறவினை | நடப்பித்தான் | நடப்பிப்பான் | நடப்பிக்கிறன் |
| செய்வினை | அடித்தான் | அடிப்பான் | அடிக்கிறன் |
| செயப்பாட்டுவினை | அடிக்கப்பட்டான் | அடிக்கப்படுவான் | அடிக்கப்படு[கிறன் |
| செயப்படுபொருள் குன்றிய வினை | வந்தான் | வருவான் | வருகிறன் |

| | | | |
|---|---|---|---|
| செயப்படு பொருள் குன்றா வினை | உண்டான் | உண்பான் | உண்கிறான் |
| உடன்பாட்டுவினை | தின்றான் | தின்பான் | தின்கிறான் |
| எதிர்மறை வினை | தின்னாமை, இது எதிர் காலத்திலேயேவரும். | | |

## தன்வினைக்கும் பிறவினைக்கும் உள்ள வேறுபாடு.

89. இவற்றுள்: தன் வினைக்கும், பிறவினைக்குமுள்ள வேறுபாடென்ன?

தன்வினை: தானே ஓர் தொழிலைச் செய்துமுடிப்பது.

(உ-ம்) நடந்தேன். வந்தேன்.

பிறவினை: தானல்லாமல் இன்னொருவனைக்கொண்டு ஓர் தொழிலைச் செய்துமுடிப்பது.

(உ-ம்) நடப்பித்தல். வருவித்தல்.

## செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் உள்ள வேறுபாடு.

90 செய்வினைக்கும், செயப்பாட்டு வினைக்கு முள்ள வேறுபாடு யாது?

ஒருதொழிலை ஒருவன் செய்ததாகக் கூறுவது செய்வினையாம்.

(உ-ம்) பார்த்தான், கடித்தான்.

எவராயினும் ஒருவரால் ஓர்தொழில் செய்யப்படுவ தாகக் கூறுவது செயப்பாட்டு வினையாம்.

(உ-ம்) பார்க்கப்பட்டான், கடிக்கப்பட்டான்.

படு, பெறு என்னும் விகுதிகளுள் ஒன்றை செய்வினை யோடு சேர்த்துச் சொல்வோமானல், அதுவே செயப்பாட்டு வினையாம்.

## செய்பொருள் குன்றிய வினைக்கும் செய்பொருள் குன்று வினைக்குமுள்ள வேறுபாடு.

91. செயப்படுபொருள் குன்றிய வினைக்கும், செயப்படு பொருள் குன்று வினைக்குமுள்ள வேறுபாடு யாது?

செயப்படுபொருள் குன்றியவினை எழுவாயுடன் சேர்த் துச் சொல்லும்பொழுது செயப்படுபொருளை ஏற்காது.

(உ-ம்) இராமன் வந்தான். இவ்வாக்கியத்திலுள்ள வந்தான் என்னும் வினைமுற்று செயப்படுபொருள் பெறுமல் வந்ததை யறிக.

செயப்படுபொருள் குன்றுவினை எழுவாயுடன் சேர்த் துச்சொல்லும்பொழுது செயப்படுபொருளை ஏற்று வரும்.

(உ-ம்) கிருஷ்ணன் நூலை படித்தான். இவ்வாக்கியத்தி லுள்ள படித்தான் என்னும் வினைமுற்று நூலை என்னும் செயப்படுபொருளைப் பெற்று வந்ததை யறிக.

## உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்குமுள்ள வேறுபாடு.

92. உடன்பாட்டு வினைக்கும், எதிர்மறை வினைக்கு முள்ளவேறு பாடு யாது? ஒன்றை உண்டு என்று கூறுவது உடன்பாட்டு வினையாம். இல்லை என்று கூறுவது எதிர் மறை வினையாம்.

### உடன்பாட்டுவினை.

(உ-ம்) வந்தான், உண்டான், நடந்தான்.

### எதிர்மறைவினை.

வாரான், உண்ணான், நடவான்.

உடன்பாடு தொழிலின் நிகழ்ச்சியையும் எதிர்மறை தொழில் நிகழாமையையும் உணர்த்துவதை யுணர்க.

### மூவிடத்திற்கும் பொதுவாகவரும் வினைமுற்றுக்கள்.

93. வியங்கோள் வினைமுற்றைத் தவிர மூன்றிடத்திற் கும் பொதுவாகவரும் வேறு வினைமுற்றுக்கள் யாவை?

அவை வேறு, இல்லை, உண்டு என்பனவாம்.

| (உ-ம்) தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| நான் வேறு. | நீ வேறு. | அவன் வேறு. |
| நாம் வேறு. | நீர் வேறு. | அவர் வேறு. |

ஏனைய விரண்டையும் இவ்வாறே கூட்டியுரைக்க.

வினையியல் முற்றிற்று

---

## இடையுரியியல்.

94. இவ்விடையுரியியல் எதனைப்பற்றிக் கூறுகின் றது?

இவ்வியல் சிறுபான்மை இடைச்சொற்களின் இலக்கணங் களையும், சிறுபான்மை உரிச்சொற்களின் இலக்கணங்களையும் முறையே கூறுகின்றது.

### இடைச்சொல்லினிலக்கணம்.

95. ஆயின், இடைச்சொல்லென்பது யாது?

இடைச்சொல்லாவது பெயர் வினைகளைப்போல் தனித்து நடக்கும் வலிமையில்லாததாய் அவற்றைச்சார்ந்து வருவதாம். அவை: வேற்றுமையுருபு, விகுதியுருபு, இடைநிலையுருபு, சுட்டு, வினா, தத்தமக்குரிய பொருளைக்கொடுக்கும் இடைச் சொற்கள் முதலியவைகளாம்.

(இவற்றுள்: வேற்றுமையுருபு, விகுதியுருபு, இடைநிலை யுருபு, சுட்டு, வினா முதலியவற்றை அவ்வவ்விடங்களிலே யேவிளக்கியுள்ளோம். அங்கங்கே கண்டு உணர்க.)

96. இனி, தத்தமக்குரிய பொருளைக் கொடுக்கும் இடைச்சொற்கள் யாவை?

அவை: ஆ, ஓ, உம், கொல்முதலியனவும், பொள்ளென, சரேலென முதலியனவும், படபடென, கலகலவென முதலிய னவுமாம்.

97. இவற்றுள், ஆ, ஓ இவ்விடைச் சொற்கள் எப் பொருளில் வரும்?

ஆ, ஓ என்னும் இவ்விரு விடைச்சொற்களும் ஆச்சரி யப்பொருளில் வரும்.

(உ-ம்.) நாடகத்தைப் பார்த்தாயா? என்ன காட்சி ஓ! அப்படியா?

## உம் என்னுமிடைச்சோல்.

98. உம், இவ்விடைச்சொல் எப்பொருளில் வரும்?

இரண்டாகவுள்ள வெவ்வேறு பொருள்களை ஒன்றாகக் கூட்டுதற்கண் வரும்.

(உ-ம்) இராமனும் கிருஷ்ணனும்.
கன்றும் பசுவும்.
பூனையும் குட்டியும்.

## கொல் என்னுமிடைச்சொல்.

99. கொல், இவ்விடைச்சொல் எப்பொருளில் வரும்?

கொல்லென்னு மிடைச்சொல் ஐயப் பொருளில் வரும்.

(உ-ம்) இது நடக்குங்கொல். அது செல்லுங்கொல்.

100. பொள்ளென, சரேலென இவை எப்பொருளில் வரும்?

அவை: விரைவுப் பொருளில் வரும்.

(உ-ம்) பொள்ளெனப் பாய்ந்தான்.
சரேலென வந்தான்.

101. படபடென, கலகலவென இவை எப்பொருளில் வரும்?

அவை ஒலிக்குறிப்புப் பொருளில் வரும்.

(உ-ம்) அவன் படபடெனத் துடித்தான்.
இவன் கலகலவெனச் சிரித்தான்.

## உரிச்சொல்.

102. உரிச்சொல் என்பது யாது?

உரிச்சொல்லாவது: தனித்து வருதலின்றி, ஒன்றன் குணத்தைக் காட்டி, பெயர்வினைகளோடு சேர்ந்து வருதலாம்.

103. அவை யாவை?

அவை: சால, தவ, நனி, கூர் முதலியனவும், கடி என்பதுமாம்.

104. சால, தவ முதலிய உரிச்சொற்கள் எப்பொருளில் வரும்?

அவை மிகுதிப்பொருளில் வரும்.

(உ-ம்) சாலப்பகை, தவக்களிறு, நனிபேதை, கூர்வளம்.

105. கடி, இவ்வுரிச்சொல் எப்பொருளில் வரும்?

அது: காவல், கூர்மை, வாசனை, அச்சம் முதலிய பல பொருள்களில் வரும்.

(உ-ம்) கடிநகர்—காப்பு. கடிமாலை—வாசனை.
கடிவேல்—கூர்மை. கடிப்பேய்—அச்சம்.

இடையுரியியல் முற்றிற்று.

## புணரியல்.

106. இவ்வியல் எதனைப்பற்றிக் கூறுகின்றது?

இவ்வியல்: சொற்கள் ஒன்றோடொன்று சேரும் தன்மையைக் கூறுகின்றது.

107. அவ்வாறு சேரும் சொற்களுள் முன்னிற்குஞ் சொல்லுக்குப் பெயரென்ன?

முன்னிற்குஞ் சொல்லுக்கு 'நிலைமொழி' என்று பெயர்.

108. பின்னிற்குஞ் சொல்லுக்குப் பெயரென்ன?

பின்னிற்குஞ் சொல்லுக்கு 'வருமொழி' என்றுபெயர்.

(உ-ம்) இராமன் வந்தான். இதனுள் இராமன் என்பது நிலைமொழி, வந்தான் என்பது வருமொழி.

109. மேற்கூறியவாறு சொற்கள் சேரும் புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

அப்புணர்ச்சி: இயல்புபுணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

110. இயல்பு புணர்ச்சியாவது யாது?

நிலைமொழியும் வருமொழியும் யாதொரு வேறுபாடுமில்லாமல் ஒன்றுபடச் சேருவதாம்.

(உ-ம்) புகழ் பெரிது. கால் சிறிது.

**111.** விகாரப்புணர்ச்சியாவது யாது?

விகாரப்புணர்ச்சி: நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் யாதாயினும் ஓர் எழுத்துத் தோன்றுதலும், அவ்விரண்டினுள் யாதாயினும் ஓர் எழுத்துத் திரிதலும், அவற்றுள் யாதாயினும் ஓர் எழுத்துக் கெடுதலும் என மூவகைப்படும்.

(உ-ம்) பூங்கொடி. இடையில் ஓர் மெய்தோன்றிற்று. பொற்குடம். இடையில் ஓர்மெய் திரிந்தது. நிலவலயம். இடையில் ஓர்மெய் கெட்டது.

### உயிரீற்றின் முன் உயிர் புணர்தல்.

**112.** இ, ஈ, ஐ என்னும் உயிரெழுத்துக்களைக் கடைசியிலுடைய சொற்களுக்குமுன் உயிரெழுத்துக்களை முதலிலுடைய சொற்கள் வந்தால் எவ்வாறு புணரும்?

அவற்றின் நடுவே யகர உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்) மணி + அழகு = மணியழகு.
மலை + அழகு = மலையழகு.
தீ + அழகு = தீயழகு.

**113.** அ, ஆ, உ, ஊ முதலிய உயிரெழுத்துக்களை கடைசியிலுடைய சொற்களுக்கு முன் உயிரெழுத்துக்களை முதலிலுடைய சொற்கள் வந்தால் எவ்வாறு புணரும்?

அவ்விரண்டின் நடுவே வகர உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்) சில + உயிர் = சிலவுயிர்.
நிலா + அழகு = நிலாவழகு.

மடு + அழகு = மடுவழகு.
பூ + அருமை = பூவருமை.

## குற்றுகர முற்றுகரங்களின் முன் உயிர் புணர்தல்.

114. குற்றுகர முற்றுகரங்களின் முன் உயிரெழுத்துக்களை முதலிலுடைய சொற்கள் வந்தால் எவ்வாறு முடியும்?

அவ்வுகரங்கள்கெட, நின்ற மெய்களின் மேல் வருமொழி உயிர் ஏறிமுடியும்.

(உ-ம்) காடு + அடைந்தான் = காடடைந்தான்.
கதவு + அழகு = கதவழகு.

## உயிரீற்றின் முன் மெய் புணர்தல்.

115. உயிரீற்றின் முன் வல்லினமெய்களை முதலிலுடைய சொற்கள் வந்தால் எவ்வாறு புணரும்?

பெரும்பாலும் வல்லினம் மிகும்.

(உ-ம்) பலா + காய் = பலாக்காய்.
படிக்க + போனான் = படிக்கப்போனான்.
வாழை + பழம் = வாழைப்பழம்.
அந்த + பொருள் = அந்தப்பொருள்.
எந்த + பையன் = எந்தப்பையன்.

## மெய்யீற்றின் முன் மெய்புணர்தல்.

116 ணகர, னகர மெய்களைக் கடைசியிலுடைய சொற்களுக்கு முன், மெய்யெழுத்துக்களை முதலிலுடைய சொற்கள் வந்தால் எவ்வாறு புணரும்?

ணகரம், டகரமாகவும், னகரம், றகரமாகவும் திரியும்.

(உ-ம்) மண் + பானை = மட்பானை.
பொன் + குடம் = பொற் குடம்.

117. லகர, ளகர மெய்களைக் கடைசியிலுடைய சொற்களுக்கு முன் வல்லெழுத்துக்களை முதலிலுடைய சொற்கள் வந்தால் எவ்வாறு புணரும்?

லகரம், றகரமாகவும், ளகரம், டகரமாகவும் திரியும்.

(உ-ம்) கல்+கோட்டை=கற்கோட்டை.
கள்+குடித்தான்=கட்குடித்தான்.

118. ணகர, னகரங்களைக் கடைசியிலுடைய சொற்களுக்கு முன் தகர, நகரங்களை முதலிலுடைய சொற்கள் வந்தால் எவ்வாறு புணரும்?

தகரம் டகரமாகவும், நகரம் ணகரமாகவும் திரியும்.

(உ-ம்) மண்+தீயது=மண்டீயது.
கவண்+நெடுமை=கவணெடுமை.

119. மகர மெய்யைக் கடைசியிலுடைய சொற்களுக்கு முன் வல்லெழுத்துக்களை முதலிலுடைய சொற்கள் வந்தால் எவ்வாறு புணரும்?

வருமொழியிலுள்ள வல்லெழுத்துக்கட்கு இனவெழுத்துக்களாகத் திரியும்.

(உ-ம்) மரம்+செடி=மரஞ்செடி.
மரம்+குறிது=மரங்குறிது.

120. சில உயர்திணைப் பெயர்களுடன் பிறபெயர்கள் வந்து சேருமிடத்து அவை எவ்வாறு புணரும்?

அவை பெரும்பாலும் தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய விகாரங்களைப் பெற்றுமுடியும்.

(உ-ம்) நம்பி+கொற்றன்=நம்பிக்கொற்றன்.
கபிலன்+பாணன்=கபிலபாணன்.

அரசன் + வள்ளல் = அரசவள்ளல்.
நளன் + வெண்பா = நளவெண்பா.

புணரியல் முற்றிற்று.

---

## சொற்றொடரியல்.

121. இவ்வியல் எதனைக் கூறுகின்றது?

இவ்வியல் பெயர் முதலான சொற்கள் ஒழுங்குபட நின்று தொடர்மொழியாகுந் தன்மையைக் கூறுகின்றது.

### தொடர்மொழி வகை.

122. ஆயின்: அத்தொடர்மொழி எத்தனை வகைப்படும்?

முற்றுத்தொடர்மொழி, எச்சத் தொடர்மொழி யென அத்தொடர்மொழி யிருவகைப்படும்.

### முற்றுத் தொடர்மொழி.

123. முற்றுத் தொடர்மொழியாவது யாது?

முற்றுத் தொடர்மொழியாவது, எழுவாய் பயனிலை செயப்படு பொருள் முதலியவற்றோடு கூடியாயினும் செயப்படுபொருள் நீங்கலாக எழுவாய் பயனிலைகளோடு சேர்ந்தாயினும் முடிவுபெறுவதாம்.

(உ-ம்) இராமன் நகரை ஆண்டான். இவ்வாக்கியம் எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருளோடுகூடி முற்றுப் பெற்றது.

அரசன் சென்றான். இவ்வாக்கியம் எழுவாயும் பயனிலையும் செயப்படு பொருளோடு கூடாது முற்றுப்பெற்றது.

## எச்சத் தொடர்மொழி.

124. எச்சத் தொடர்மொழி எத்தனை வகைப்படும்?

எச்சத்தொடர்மொழி: பெயரெச்சத் தொடர்மொழியென்றும், வினை யெச்சத் தொடர்மொழியென்று மிரண்டு பிரிவினவாம்.

(உ-ம்) உண்டமாடு வந்தது. இது பெயரெச்சத்தொடர் மொழி.

வீடுகட்டிக் குடியேறினன். நெற்கதிர் அறுத்து நேற்று வந்தார்கள். இவை வினையெச்சத் தொடர்மொழி.

## எழுவாய்.

125. எழுவாயாவது யாது?

எழுவாயாவது, ஒரு தொடர்மொழியின் முதற்பொருளாம். எழுவாய் என்பதற்கு, கருத்தாவென்பது பொருள்.

(உ-ம்) சாத்தன்வந்தான் என்பதில் சாத்தன் என்பது தொடர்மொழியின் முதற்பொருளாகிய எழுவாயாம்.

## பயனிலை.

126. பயனிலை யாவது யாது?

பயனிலையாவது தொடர்மொழியின் முதற்பொருளாகிய கருத்தாவின் தொழிலைக் காண்பிப்பது.

(உ-ம்) இராவணன் மாண்டான். இதில் மாண்டான் என்பது தொடர்மொழியின் முதற்பொருளாகிய இராவணனது தொழிலாகிய மாளுதலைக்காட்டிற்று.

## செயப்படுபொருள்.

127. செயப்படு பொருளாவது யாது?

செயப்படு பொருளாவது, தொடர்மொழியிலுள்ள கருத்தாவின் தொழிற்பயனை யடைவது. இதனைச் செய்பொருள் என்றுங் கூறுவர்.

(உ-ம்) இராமன் இராவணனைக் கொன்றான். இத்தொடர்மொழியிலுள்ள இராமனாகிய வினைமுதலினதுதொழிலாகிய கொல்லுதலின் பயனை யுடைவது இராவணனாதலின், இராவணன் செயப்படு பொருளாயிற்று.

வேறு.

128. எழுவாயின்றித் தொடர்மொழி வருதலுமுண்டோ?

உண்டு.

(உ-ம்) சென்றான். இதில் அவன் என்னும் எழுவாய் மறைந்து வந்தமை காண்க.

129. எழுவாயேயல்லாமல் பயனிலை மறைந்துவருதலுமுண்டோ?

உண்டு.

அவர்களுக்குள் பெரியவர் யார் என்ற கேள்விக்கு சாத்தன் என்ற விடையில் பெரியவர் என்னும் பயனிலை மறைந்து வந்தமை காண்க.

130. எழுவாய் ஒன்றும் பலவும் ஒரே பயனிலையைக் கொள்ளுதலன்றிப் பல பயனிலைகளைக் கொள்ளுதலுமுண்டோ?

உண்டு.

ஆனால் பல பயனிலைகளாகிய வினைகளில் கடைசி வினை மாத்திரம் முற்றுவினையாகவரும்.

(உ-ம்) அவனும் இவனும் வீட்டிலிருந்தார்கள். இதில் இரண்டு எழுவாய்களும் ஒரே பயனிலையைக்கொண்டன.

நீதிபதி, வாதி பிரதிவாதிகளை யழைத்துக் காரியத்தை விசாரித்து முடிவு சொன்னர். ஒரே எழுவாய் மூன்று பயனிலைகளைக்கொண்டது.

## எழுவாயை யறிதல்.

131. ஒரு தொடர்மொழியிலிருந்து எழுவாயை யறிவதெப்படி?

ஒவ்வொரு தொடர் மொழியிலுமுள்ள பயனிலைக்கு ஏற்ற வினப்பெயரைச்சேர்த்து வினவினல் எழுவாயை யறியலாம்.

(உ-ம்) சாத்தன் வீட்டைக் கட்டினன். இதில் எவன் வீட்டைக் கட்டினன்? என்ற வினவிற்கு சாத்தன் என்பது விடையாதலின் சாத்தன் என்பது எழுவாயாம்.

சாத்தி வந்தாள் எவள் வந்தாள்?
அவர்சென்றார் எவர்சென்றார்? அல்லது யார்சென்றார்?
குதிரை ஓடிற்று எது ஓடிற்று?
பறவைகள் வந்தன எவை வந்தன?

## பயனிலையை யறிதல்.

132. ஒரு தொடர்மொழியிலிருந்து பயனிலையையறிவதெப்படி?

தொடர்மொழியிலுள்ள கருத்தாவின் தொழில் என்ன என்று கருத்தாவிற்குத் தக்கபடி வினவின் பயனிலையை யறியலாம்.

(உ-ம்) கந்தன் பாடம் படித்தான். இதில் கந்தன் என்னசெய்தான்? என்ற வினவிற்கு படித்தான் என்பது விடையாதலின் படித்தான் என்பது பயனிலையாம்.

கந்தன் பாடம் படிக்கிறான். கந்தன் என்ன செய்கிறான்?
கந்தன் பாடம் படிப்பான். கந்தன் என்ன செய்வான்?
முருகன் மிகவும் நல்லவன். முருகன் எப்படிப்பட்டவன்?

ஒரு தொடர்மொழியின் ஈற்றிலிருக்கும் வினையோ அல்லது பெயரோ பயனிலையாக வரும்.

## செய்பொருளையறிதல்.

133. ஒரு தொடர்மொழியிலுள்ள செயப்படுபொருளை யறிவதெப்படி?

ஒரு தொடர்மொழியிலுள்ள எழுவாய்க்கும் பயனிலைக்கும் நடுவில், யாரை அல்லது எதை அல்லது எவற்றை என்னும் சொற்களுள் ஒன்றை வைத்து வினவினால் செயப்படுபொருளை யறியலாம்.

(உ-ம்) அரசன் நம்மை ஆதரிக்கிறான். இதில் அரசன் யாரை ஆதரிக்கிறான்? என்ற வினவிற்கு நம்மை என்பது விடையாதலால் நம்மை யென்பது செயப்படுபொருளாம்.

இராமன் வீட்டைக் கட்டினான். இதில் இராமன் எதைக் கட்டினான்? என்ற வினவிற்கு வீட்டை என்பது விடையாதலால் வீட்டை யென்பது செயப்படுபொருளாம்.

இராமன் மாடுகளை வளர்க்கிறான். இதில் இராமன் எவற்றை வளர்க்கிறான்? என்ற வினவிற்கு மாடுகளை என்பது விடையாதலால் மாடுகளை யென்பது செயப்படுபொருளாம்.

134. ஒரு பயனிலைக்குச் செயப்படுபொருள் ஒன்றே வருதலன்றி இரண்டு மூன்று முதலாக வருதலுமுண்டோ?

உண்டு; (உ-ம்) கடவுள் நம்மையும், மிருகங்களையும், பறவைகளையும் பாதுகாக்கிறார்.

### செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்கல்.

135. ஒரு தொடர் மொழியிலுள்ள செய்வினையை செயப்பாட்டுவினையாக்க வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

ஒரு தொடர் மொழியிலுள்ள செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்க வேண்டுமானால், எழுவாயை மூன்றும் வேற்றுமையிலும் செயப்படுபொருளை முதல்வேற்றுமையிலும் வைத்துப் பயனிலையைச் செயப்படுபொருளுக் கேற்றபடி செயப்பாட்டு வினையாக மாற்றவேண்டும்.

(உ-ம்) அரசன் கோயிலைக்கட்டினான். இது செய்வினை. அரசனால் வீடு கட்டப்பட்டது. இது செயப்பாட்டுவினை.

தச்சன் பெட்டியைச் செய்தான். இது செய்வினை. தச்சனால் பெட்டி செய்யப்பட்டது. இது செயப்பாட்டு வினை.

யானை பாகனைக் கொன்றது. இது செய்வினை. யானையால் பாகன் கொல்லப்பட்டான். இது செயப்பாட்டு வினை.

### வாக்கியங்களின் வகை.

136. வாக்கியங்கள் எத்தனை வகைப்படும்?

வாக்கியங்கள் தனி வாக்கியமென்றும், கலப்பு வாக்கியமென்றும், தொடர் வாக்கியமென்றும் மூன்று வகைப்படும்.

137. அவற்றுள் தனி வாக்கியமாவது யாது?

தனி வாக்கியமாவது ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் சேர்ந்து வருவதாம். இன்னும் செயப்படுபொருள் முதலிய வேற்றுமைச் சொற்கள் சேர்ந்து வந்தாலும் தனி வாக்கியமேயாம்.

(உ-ம்) நந்தன் தில்லைக்குச் சென்றான். நந்தன் மனமொழி மெய்களால் கடவுளைத் துதித்தான்.

**138.** கலப்பு வாக்கியமாவது யாது?

கலப்பு வாக்கியமாவது முன் சொல்லிய தனி வாக்கியத்தையடுத்துச் சில அடை வாக்கியங்கள் வருமாயின் அது கலப்பு வாக்கியமாம்.

(உ-ம்) பிரஜைகள் ஆனந்திக்கும்படி நன்றாய் ஆள்பவன் யாவனோ அவனே அரசனெனத்தக்கவன்.

**139.** தொடர் வாக்கியமாவது யாது?

தொடர் வாக்கியமாவது, தனித்தனியாய் பல வாக்கியங்கள் சேர்ந்து வருவதும், தனி வாக்கியமும், கலப்பு வாக்கியமும் கலந்து வருவதும் தொடர் வாக்கியங்களாம்.

(உ-ம்) மதுரைமா நகரில் வந்து சிறந்த புலவனெனப் பெயர் பெற்றவனும், தமிழ் இலக்கண விலக்கியங்கட்கு உரை செய்தவனும், நக்கீரன் என்னும் பெயருடையவனும் யாவனோ அவனைப் போற்றிப் பாடுவோமாக.

சொற்றொடரியல் முற்றிற்று.

---

## அனுபந்தம்.

### பகுபத முடிபு.

உண்டான்:—உண் (பகுதி) ஆன் (விகுதி) ட் (இறந்தகால விடைநிலை) என்ற மூன்று உறுப்பால் முடிந்தது.

கூனன்:—கூன் (பகுதி) அன் (விகுதி) மெய்யெழுத்தின் முன் உயிரெழுத்து வரின், வந்த உயிர் அந்த மெய்யின்மேலேறும் என்ற விதிப்படி கூனன் என முடிந்தது.

வந்தான்:—வா (பகுதி) ஆன் (விகுதி) த் (இறந்தகால விடைநிலை) சந்தியால் வந்த தகரம் நகரமானது. (விகாரம்) வாவென்னும் பகுதி முதல் குறுகிற்று.

கடந்தான்:—கட (பகுதி) ஆன் (விகுதி) த் (இறந்தகால விடைநிலை) சந்தியால் தோன்றிய தகரம் நகரமானது (விகாரம்).

நடந்தனன்:—நட (பகுதி) அன் (விகுதி த் இறந்தகால விடைநிலை) அன் (சாரியை) த் (சந்தி). இது பகுதி முதலான வைந்தும் பெற்று, சந்தியால் வந்த தகரமெய் நகரமெய்யாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

செத்தான்:—சா (பகுதி) ஆன் (விகுதி) த் (இறந்தகால விடைநிலை) த் (சந்தி) சா என்னும் பகுதி முதல் குறுகி எகரமாகத் திரிந்தது.

படித்தனன்:—படி (பகுதி) அன் (விகுதி) த் (இறந்தகாலவிடைநிலை) அன் (சாரியை) த் (சந்தி) பகுதி முதலான ஐந்துறுப்புக்களால் முடிந்தது.

## புதிய முறைப்படி எங்களால் பிரசுரிக்கப்பெற்ற பாடசாலைக்குரிய தமிழ்ப் புத்தகங்கள்.

---

*இப்புத்தகங்கள் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.*

---

பாலர் நன்மதிக் கதைகள்:—இதில் வழிபடுதல், பரோபகாரம், உண்மை, ஒழுக்கம், ஜீவகாருண்யம், தர்மம் இதுபோன்றவைகளுக்குத் தகுந்த முதுமொழிகளுடன் நீதிக்கதைகளமைத்து நமது மாணவர்களுக்கு நன்கு விளங்குமாறு வரையப்பெற்றவை.

விலை அணா 3.

நற்புதல்வர்கள்:—பூர்வகாலத்தில் நடந்த புராணங்களின் செயல்களில் இயற்கையாய் புகழுங்கீர்த்தியும் ஓங்கப்பெற்ற ஸ்ரீராமன், துருவன், பரசுராமன், காங்கேயன், பூரு, மார்க்கண்டேயன், மேகநாதன், வீதிவிடங்கன், பிரக்லாதன், இவர்களைப்பற்றிய சரித்திரங்களைச் சுருக்கி வரைந்து இடையிடையே உவமான முதுமொழிகளுடன் வரையப் பெற்றவை. சிறுவர்களுக்குண்டான நீதிக்கதைகளில் இதுவு மொன்றே.

விலை அணா 4.

நற்பெண்டீர்—இதிலுள்ள கதைகளை நமது சிறுவர்களும் சிறுமிகளும் கற்றறியவேண்டியது அவசியமே. ஆயினும், இக்கதைகள் கற்பு என்னும் மகிமையை நிலைநிறுத்தியவைகளே. ஒவ்வொரு கதைகளிலும் இடத்திற்குத் தகுந்தபடி நீதி மொழிகளைத்தொகுத்து விளக்கப்பெற்றவை.

விலை அணா 4.

வாலிசரிதை—இராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில் குறித்துள்ள வாலி என்னும் வீரனுடைய சரித்திரத்தை பிறந்தது முதல் இறந்ததுவரை விடாது வரையப்பெற்றவை. தவிர வியாசம் எழுதுவதற்கு முக்கிய ஆதாரமான பத்தி இலக்கண (paragraph system) மும் இடையிடையே தெளிவுடன் விளக்கிக்காட்டி எழுதியுள்ளது.

விலை அணா 2—6.

நீதிசாரத்திரட்டு—இது எலிமெண்டரி பாடசாலை மாணவர்களுக்கு நீதி போதனைப் புத்தகமாகவைக்கும்படி எழுதப்பட்டவை. இதில் உருது. ஆங்கில நீதி நூல்களினின்றும் பொறுக்கி எடுத்தமைத்து இனிய நீதி வியாசங்களையும் வரைந்துளது. விலை அணா5.

அற்புதக்கணையாழி—இது கற்பை விளக்கும் இனிய செந்தமிழ்க்கதை. பல கலாசாலைகளில் 6, 7, 8-வது வகுப்புமாணவர்களுக்குத் தமிழ் துணைப்பாடப் புத்தகமாக வைத்து ஆதரிக்கப் பெற்றிருக்கிறது.

விலை அணா 5.

யாக்ஞவல்கியம்—ஒரு முனிவரது இரு மனைவியர்களின் இல்வாழ்க்கை நிலைமையையும், பண்டைய வழக்க ஒழுக்கங்களையும், ஆன்ம போதத்தையும் எளிதில் உணரும்படி விளக்கி வரையப்பெற்றது. 7, 8, 9-வது வகுப்புகளுக்குத் தமிழ் துணைப்பாடப் புத்தகமாகவும் வரையப்பெற்றிருக்கிறது. விலை அணா 9.

மஹாராணி மங்கம்மாள்—பாண்டி நாட்டை ஆண்டுவந்த மன்னர்களின் வரலாறும் அவர்கள் செய்த நன்மைகளும் மஹாராணி மங்கம்மாள் சரித்திர வரலாறும் எளியநடையில் மாணவர்கள் படித்துணரும்படி எழுதியவை. விலை அணா 3.

செய்யுட்பாடக் கோவை முதற் பாகம்—கலாசாலை மாணவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டு பூர்வீக 20-தமிழ் நூல்களிலிருந்து 507 செய்யுள்களைத் திரட்டி அவைகளுக்குத் தகுந்தவாறு உதாரணத்துடன் வரையப்பெற்றது. 1, 2, 3-வது பாரம் மாணவர்களுக்குப் பாடப்புத்தகமாகவும் வைத்திருக்கிறார்கள். விலை அணா 8.

செய்யுட்பாடக்கோவை இரண்டாம் பாகம்—தொள்ளாயிரம் பாடல் குறிப்புரையுடனுள்ளது—இதில் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ், சதகம், வெண்பா, கோவை, புராணங்கள், நீதி நூல்கள் முதலிய 104 நூல்களினின்றும் செவ்வனே ஆராய்ந்தமைக்கப்பட்டுள்ள 900 செய்யுள்கள் நிறைந்தவை. விலை ரூ 1—4—0.

ஆழ்வார் ஸ்ரீ குலசேகரர்—இப்புத்தகத்தில் ஆழ்வாருடைய திவ்ய சரித்திரத்தையும் சில சாஸனங்களையும் அடக்கி எளிய நடையில் மாணவர்களுக்குப் பயன்படுமாறு எழுதியுள்ளது. விலை அணா 6.

பொய்யாமொழிப்புலவர் சரித்திரம்—இந்நூல் இனிய செந்தமிழ் நடையால் குறள் முதலிய நூல்களின் பொருளாலும், சொல்லாலும், செய்யுளாலும், பழமொழிகளாலும், நல்லொழுக்கமான பல விஷயங்களாலும் மிகவும் மேம்பட்டு விளங்கும்படி இயற்றியுள்ளது. விலை அணா 6.

சீதாராம விஜயம்—இப்புத்தகத்தில் இராமாயண வசனத்தை மிகவும் சுருக்கமாக எளிய நடையில் மூன்று அழகிய படங்களுடன் எழுதப்பெற்றது. விலை அணா 10.

மேற்கண்ட புக்ஸ்களும், மற்ற ஸ்கூலுக்கு வேண்டிய இதர புத்தகங்களும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
பப்ளிஷர்ஸ் அண்டு புக்ஸெல்லர்ஸ், மதுரை


---

Printed at the Meenalochani Press, Madura—27.